Chapter X*XIII Code of Criminal Procedure)*

| | | | |
|---|---|---|---|
| *IN THE COURT OF`* | I ADDITIONAL DISTRICT COURT TIRUNELVELI | | |
| Calendar | | SC.No.882/2025 | |
| Miscellaneous | | | |
| Preliminary Register | | | |
| Sessions | | | |
| Deposition of Witness for | | Prosecution | P.W.4 |
| | | Defence | |
| Name | | திரு.குமார் | |
| Father's Name | : | திரு.கனகரத்தினம் | |
| Village | : | கூனியூர் | |
| Taluk | : | அம்பாசமுத்திரம் | |
| Calling | : | அரசு தரப்பு சாட்சி | |
| Age | : | 65 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 17th day of March 2026.

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.)

<u>முதல் விசாரணை</u> :--

நான் தற்போது கூனியூரில் குடியிருந்து வருகிறேன். சாட்சி சுப்பிரமணியன் என்பவரை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். சுமார் ஆறு மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் போலிசார் எங்கள் ஊருக்கு வந்து தெருவில் உள்ள வீடுகளில் வந்து விலாசத்தை கேட்டுகொண்டுயிருந்தார்கள். அப்போது அங்கு வைத்து கையொப்பம் போட்டு கொடுத்தேன். பார்வைமகஜரில் உள்ள என்னுடைய கையெழுத்து

மட்டும் **அ.சா.ஆ.2** ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். ஆவணங்களை பரிசீலனை செய்த பிறகு அனுமதி வழங்கப்பட்டது)

<u>குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)</u>

கடந்த 17.09.2025ம் தேதி மாலை 5.00 மணிக்கு நானும், சுப்பிரமணியனும் எங்கள் ஊர் கலையரங்கம் பின்புறம் பேசிக்கொண்டுயிருக்கும்போது சேரன்மகாதேவி காவல் ஆய்வாளர் கலையரங்கம் பின்புறம் உள்ள சம்பவ இடத்தையும், அதன் சுற்றுப்புறத்தையும் எங்கள் முன்பு பார்வையிட்டு மாதிரி வரைபடமும், பார்வைமகஜரும் தயார் செய்தார்கள் என்றும், அந்த பார்வைமகஜரில் நானும், சுப்பிரமணியனும் கையெழுத்து செய்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

மறுவிசாரணை இல்லை.

Chapter XX*III Code of Criminal Procedure)*

| | | | |
|---|---|---|---|
| *IN THE COURT OF`* | I ADDITIONAL DISTRICT COURT TIRUNELVELI | | |
| Calendar | | SC.No.882/2025 | |
| Miscellaneous | | | |
| Preliminary Register | | | |
| Sessions | | | |
| Deposition of Witness for | | Prosecution | P.W.5 |
| | | Defence | |
| Name | | திரு.சுப்பிரமணியன் | |
| Father's Name | : | திரு.கோபாலகிருஷ்ணன் | |
| Village | : | கூனியூர் | |
| Taluk | : | அம்பாசமுத்திரம் | |
| Calling | : | அரசு தரப்பு சாட்சி | |
| Age | : | 39 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 17th day of March 2026.

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.)

<u>முதல் விசாரணை</u> :—

நான் தற்போது கூனியூரில் குடியிருந்து வருகிறேன். சாட்சி குமார் என்பவரை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். சுமார் ஐந்து மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் என் வீட்டின் அருகில் நின்றுகொண்டுயிருக்கும்போது போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையெழுத்து செய்து கொடுத்தேன். அதில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது. பார்வைமகஜரில் உள்ள என்னுடைய

கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3** ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். ஆவணங்களை பரிசீலனை செய்த பிறகு அனுமதி வழங்கப்பட்டது)

<u>குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)</u>

கடந்த 17.09.2025ம் தேதி மாலை 5.00 மணிக்கு நானும், குமாரும் எங்கள் ஊர் கலையரங்கம் பின்புறம் பேசிக்கொண்டுயிருக்கும்போது சேரன்மகாதேவி காவல் ஆய்வாளர் கலையரங்கம் பின்புறம் உள்ள சம்பவ இடத்தையும், அதன் சுற்றுப்புறத்தையும் எங்கள் முன்பு பார்வையிட்டு மாதிரி வரைபடமும், பார்வைமகஜரும் தயார் செய்தார்கள் என்றும், அந்த பார்வைமகஜரில் நானும், குமாரும் கையெழுத்து செய்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

மறுவிசாரணை இல்லை.